திருநெல்வேலி மாவட்டம் பெரியார் சந்திப்புப் பேருந்து நிலையத்தில் வெள்ளநீரை தடுப்பதற்கு

ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்குவதற்கு உத்தரவு!

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

நெல்லை, டிச.15- திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கி பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி மாநகராட்சி பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் தேங்கிய மழைநீரை இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்ட இடங்களை தமிழ்நாடு சட்டமன்றத் பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் நேற்று (14.12.2024) பார்வையிட்டு ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த பல்வேறு பகுதிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று இரண்டாவது நாளாக நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்த துறை சார்ந்த அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழை காரணமாக மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வெள்ளநீரினால்; பாதிக்கப்பட்டது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாநகராட்சி பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் நிரந்திரமாக வெள்ளநீரை தடுப்பதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மழைநீர்; கால்வாய் அமைக்கும் பணிகள் தொடங்குவதற்கு அலுவலர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இனி வரும் காலங்களில் பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் வெள்ளநீர் தேங்காதவாறு பணிகள் நடைபெறும்;. மேலும் நீர் செல்லும் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படாத வகை

யில் பல்வேறு பகுதிகளில் இருந்து 20 ராட்சச மின் மோட்டார்கள் கொண்டு வரப்பட்டு நீர் வெளியேற்றும் பணிகள் ஈடுப்படுத்தப்பட உள்ளது.

முக்கூடல் பாபநாசம் ஆலங்குளம் சாலையிலும் மழைநீர் வடிகால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை உடனடியாக சரிசெய்திட தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நெற்பயிர், வாழை, பிற தானியங்கள் சேதங்கள் குறித்து கணக்கீடு செய்யப்பட்டு கணக்கீடு நிறைவு பெற்ற பின் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கொண்டு சென்று தேவையான நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து வெள்ள நீரில் மக்கள் சிக்கிக்கொண்டால் அவர்களை மீட்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகராட்சி வர்த்தக மையத்தில் 6 நாட்டு படகு,தண்ணீரை வெளியேற்றும் மோட்டார்களுடன் 50 தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளதை பார்வையிட்டார்கள். சீவலப்பேரி தாமிரபரணி ஆற்றுப் பாலத்தை வெள்ளம் மூழ்கடித்து செல்வதையும்,சேவியர் காலனியில் பாதிக்கப்பட்ட இடங்களில் இயந்திரங்கள் மூலம் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதையும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பார்வையிட்டு பணிகளை விரைந்து மேற்கொள்ள மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில்,மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஃ தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் திரு.கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு. என்.ஒ.சுகபுத்ரா, துணை மேயர்.கே.ஆர்.ராஜு, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான் உட்பட பலர் உடனிருந்தனர்.

தலைமைச் செயலகத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் தலைமையில் தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் தினம் 2025 சிறப்பாக நடத்துவது தொடர்பாக ஆய்வு கூட்டம் நேற்ற (14.12.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் எம்.எம். அப்துல்லா எம்.பி., பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், அயலகத் தமிழர் நலவாரியத் தலைவர் காத்திகேய சிவசேனாதிபதி, அரசு துணைச் செயலாளர், பவன்குமார் ஜி கிரியப்பனவர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பி. கிருஷ்ணமூர்த்தி, IOFS, அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர்கள் கால்டுவெல் வேல்நம்பி, புகழ்காந்தி, துபாய் மீரான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் பிறந்தநாள் விழா! கழகக் கொடியேற்றி கல்வெட்டு திறப்பு!

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - தூத்துக்குடி சரத்பாலா சிறப்புரை!

படப்பை ஆ.மனோகரன் தலைமை! கே.ஜி. பாஸ்கர்சுந்தரம் - சரஸ்வதி மனோகரன் பங்கேற்பு!

காஞ்சிபுரம், டிச் 15 - குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் நாளை (16.12.2024-திங்கட்கிழமை) மாலை 5.00 மணிக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஒன்றிய கழகத்தில் அடங்கிய 6 ஊராட்சிகளில் கழக இருவண்ணக் கொடியேற்றி கல்வெட்டு திறக்கும் நிகழ்வுகள் முறையே வண்டலூர்-வாலாஜாபாத் சாலையில் வரதராஜபுரம் ஊராட்சி ரூபி லேண்ட் மார்க் அருகிலும் கரசங்கால் ஊராட்சி பேருந்து நிலையம் அருகிலும், படப்பை ஊராட்சி ஆல்வின் பள்ளி அருகிலும், வட்டம்பாக்கம் ஊராட்சியில் பணப்பாக்கம் மேடு பகுதியிலும், ஒரகடம்-சிங்கபெருமாள்கோவில் சாலையில் வளையக்கரணை ஊராட்சி மதுரா புதுக்கோட்டையிலும், சென்னக்குப்பம் ஊராட்சி ஒரகடம் பகுதியிலும் நடைபெறுகிறது. அதன்பிறகு சென்னக்குப்பம் ஊராட்சியில் மாலை 6.00 மணிக்கு நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் எளியோர் எழுச்சிநாள் விழா பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமையும், மாவட்ட பிரதிநிதி -ஒன்றிய குழு உறுப்பினர் மூ.ராஜேந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே.ஆனந்தன், கிளைக் கழக செயலாளர்கள் ஜி.மோகன்தாஸ், இ.சிலம்புசெல்வன் வரவேற்புரையில், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மு.சுப்ரமணி, வ. நந்தகோபால், ஏ.மணி, வாசுகிமகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையும் வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டு கழக இருவண்ணக் கொடியேற்றி கல்வெட்டு திறந்து வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தலைமைக் கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா, திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ. வந்தேமாதரம், மாவட்ட இளைஞர் அணி அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர் ப.இராமமூர்த்தி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணைத்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், இளம் பேச்சாளர் நா.அருண், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சங்கீதாவேலு, பொன். ரமேஷ்கவி, எஸ்.கர்ணன், மலர்விழிதமிழ்அமுதன், கு.ஏழுமலை, லட்சுமிஞானசேகரன், ச.பால கிருஷ்ணன், எஸ்.வைரம், ஜி.எ. ராயப்பா, தினேஷ்கந்தசாமி, ம.ரேவதி, இளங்கோ, கோதண்டராமன், சத்தியமூர்த்தி, உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

நிறைவாக ஒன்றிய இளைஞர்அணி அணி அமைப்பாளர் ப.அறிவொளி - ஒன்றிய மாணவர்அணி அமைப்பாளர் அ.ஜமீர், சென்னகுப்பம் ஊராட்சி இளைஞர்அணி அமைப்பாளர்கள் இரா. விமல்குமார், கே. ஜெயச்சந்திரன், ஜே.எம்.எஸ். ஸ்டாலின், என்.பாண்டுரங்கன் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

எனவே இந்நிகழ்ச்சியில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகத்தை சார்ந்த கழக முன்னோடிகள், கிளைக்கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள், இளைஞரணி மாணவர் அணி மகளிர்அணி சேர்ந்த கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

எம்.கே. ஜெய் - ஷெர்லிஜெய் வரவேற்புரை! துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

மடிப்பாக்கம் 187வது வட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச.15- சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி, 187வது வட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழக துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் உதயநாள் விழா பொதுக் கூட்டம் இன்று (15.12.2024 ஞாயிறு) மாலை 5 மணியளவில் மடிப்பாக்கம், பொன்னியம்மன் கோவில் அருகில் நடைபெறு கிறது.

இக்கூட்டத்தில் வட்டச் செயலாளர் மடிப்பாக்கம் எம்.கே.ஜெய், மாமன்ற உறுப்பினர் ஷெர்லி ஜெய் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிர மணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ., ஆகியோர் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.வி. ரவிச்சந்திரன், ஏ.ஏம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., மு. மகேஷ்

குமார், திருவொற்றியூர் கருணாநிதி, ஜ.அன்றோ வளர்பிரட்டன், பாலாக்கம் க.சோமு, பாலவாக்கம் த.விஸ்வநாதன், மு.மனோகரன், ஜி.வெங்கடேசன், எம்.கே.ஏழுமலை, எஸ்.ஏ.ஹரி

கிருஷ்ணன், வி.எட்டியப்பன், விஜயபாலன், பா.அருண்குமார், எம். ஸ்ரீகாந்த் உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் ராமகிருஷ்ணன், மகாலிங்கம், அ.ஈஸ்வர மூர்த்தி, ஹரிஹரன், ரமேஷ் , எளதேவிகமல் என்.ஆர்.சீனிவாசன் தயாளன், என்.வி.ஆனந்த குமார், நிதிராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

நொளம்பூர் வே.ராஜன், ப.ஆலன் முன்னிலை! வி.ஏழுமலை தலைமையில்

மதுரவாயல் 145வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

காரம்பாக்கம் க.கணபதி, அதிரடி அல்தாப், அ.நஸ்ரின் பானு சிறப்புரை!

சென்னை, டிச.15- சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 145 வது வட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதய நாள் தெருமுனை கூட்டம் இன்று (15.12.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு சக்தி நகர் 8வது தெரு முத்துமாரியம்மன் கோயில் அருகில் நெற்குன்றத்தில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்திற்கு வட்ட கழக துணைச் செயலாளர் வி.ஏழுமலை தலைமை ஏற்கிறார். பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே. ராஜன், வட்ட கழக செயலாளர் ப.ஆலன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.கர்ணல், சி.ஏ. முரளி, சி.டி.ரமேஷ், ஜி.ஆர்.சரவணன், மு.அரசகுமார், பி.கிருபாபால சந்தர், கே.எல்.சந்தானம், சி.ஆர்.இன்பராஜ், கே.முனுசாமி, எஸ்.எஸ்.பாரின்பிரசாத், கே.துரைவேல், எம். ஜான்அன்பரசு ஆகியோர் வரவேற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் அதிரடி அல்தாஃப், அ. நஸ்ரின் பானு, ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

மேலும் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்து உரை நிகழ்த்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, பி.டி.பாண்டிச்செல்வம், அ.ம.துரைவீரமணி , கே. குமரேசன், எம்.ஏ.செந்தில்சுரேஷ், ஆ.மாலினி எம்.சி., தீ.பாலாஜி, எம்.உதயகுமார், வட்ட கழக செயலாளர்கள்; எஸ். ஜி.மாதவன், எம்.கே.பி. அண்ணாதாசன், எம்.எம். ஜெயரத்தினம், ச.சசிகுமார், எம்.ரூபன், எம்.இ. ஸ்டாலின் எம்.சி., ரமணி மாதவன்.எம்.சி பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

அ.கோபிநாத், ஜி.ஆர். சீனிவாசன், ஏ.பரசுராமன், ஆர்.சி.வேலு ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை - நந்தனம் கி.மதி - எஸ்.முரளி பங்கேற்பு!

சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் நலத்திட்ட உதவிகள்!

மாவட்டச் செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்! ச.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, டிச.15- சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சென்னை தென் மேற்கு மாவட்டம் சார்பில் கீழ்க் காணும் வட்டங்களில் இன்று (15.12.2024 நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

125 வது வட்டம், காலை 9 மணிக்கு பி.வி. கோயில் தெரு, வட்டக் கழக அலுவலகம் டாக்டர் அம்பேத்கர் பாலம்அருகில், மயிலை, அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை நிகழ்ச்சி ஏற்பாடு மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.எம். செல்வராஜ், நடைபெறுகின்றது.

வட்டம் 141 (அ) வட்டம், காலை 10 மணிக்க, 3வது குறுக்குத் தெரு, 4 ஆவது பிரதான சாலை சந்திப்பு சி.ஐ.டி.நகர்,தியாகராயர் நகர் அன்னை ஸ்டோர்அருகில்மாவட்ட துணை அமைப்பாளர் கோயில் தி.ரமேஷ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.

132 வது வட்டம், பிற்பகர் 12 மணிக்கு ,காமராஜர் காலனி 6 வது தெரு கோடம்பாக்கத்தில் தியாகராயர் நகர் தொகுதி, மாவட்ட துணை அமைப்பாளர் ஆனந்தராஜ் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளார்.

மேற்காணும் நிகழ்ச்சிகளில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை, நந்தனம் மதி, எஸ்.முரளி, தொகுதி பார்வையாளர்கள் கோவி.லெனின்,என். பத்மரியா, மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள்,மாவட்ட துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் வடக்கு பகுதி, 102அ வட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் எம்.ஜி.ரவிக்குமார் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு சிறப்புரையாற்றினார். இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதி செயலாளர் ச.பரமசிவம், தலைமை கழக பேச்சாளர் கழக கொள்கைபரப்பு துணை செயலாளர் கரூர் முரளி, இளம் பேச்சாளர் வி.தினேஷ், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர் வி. எஸ்.கலை, ஆ.சங்கீதா, ராணி ரவிச்சந்திரன், எம்.சி, மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் ச.அசோக்குமார், வழக்கறிஞர் தேவேந்திரன், யோகேஸ்வரி சுந்தரேசன், திருமலை பொன்னுரங்கம் எம்.சி, டி.எஸ்.ராஜா, ரெங்கராஜன், அரவிந்த் குமார், வடக்கு பகுதிக்கு உட்பட்ட பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளுக்கு உட்பட்ட பகுதி /அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னணியினர் நிர்வாகிகள் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 123 'அ' வட்டக் கழகம் சார்பில் குருபுரம், புனிதமேரி சாலை, விசாலாட்சி தோட்டம், வசந்த மண்டபம் அருகிலும் மூ.இராஜேந்திரன், விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை அமைப்பாளர்கள் சீ.வி.மணிமகண்டன், மார்வாடி தோட்டம் மணிகண்டன் ஆகியோரின் நிகழ்ச்சி ஏற்பாட்டிலும் அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் 123 'அ' வட்டத்திற்குட்டபட்ட துப்புரவு பணியாளர்களுக்கும் பொது மக்களுக்கும் நலத்திட்ட உதவிகளும் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலளார் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி, ஆகியோர் வழங்கினார்கள். அதுபோது மேற்கண்ட பகுதிக் கழக நிர்வாகிகளும், வட்டக் கழக நிர்வாகிகளும், மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் வடக்கு பகுதி 161 வது வட்ட துணைச் செயலாளர் கே. பாண்டியன் இல்ல திருமண விழாவில் மணமக்கள் எஸ். சுந்தர் (எ) சாம் (ஐ.டி.ஐ), கே.பி. ஸ்டெல்லா மணமக்களை பகுதி செயலாளர் பி. குணளான், தெற்கு பகுதி செயலாளர் 12 வது மண்டலக்குழு தலைவர் என். சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே. இப்ராகிம், ஆர்.டி.. பூபாலன், ஆர். பாஸ்கர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், எம்.ஆர்.. ஸ்ரீனிவாசன், வட்ட கழக செயலாளர்கள், கே.ஆர். ஜெகதீஸ்வரன், ஏ.வேலவன் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் வாழ்த்தினர்.